தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1973 ஆகஸ்ட் 7

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் திரு. கே. கே. சுப்பண்ண கவுண்டர் அவர்கள் மறைவுகுறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கோபிச்செட்டிபாளையம் பொது—கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1946-ஆம் ஆண்டு முதல் 1952-ஆம் ஆண்டுவரை உறுப்பினராக இருந்த திரு. கே. கே. சுப்பண்ண கவுண்டர் அவர்கள் 5—8—1973-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவையின் சார்பில் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்திற்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசு அலுவலகங்களில் வேலை நேரம்

*26 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரசு அலுவலக வேலை நேரம் 1973 ஏப்ரல் முதல் மாற்றப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், இதற்குக் காரணம் என்ன?